## சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு

# காலிமரபுரிமை மன்றம்


முகவரி :- 212/1/1, வக்வெல்ல வீதி, காலி

தொலைபேசி இல :- 0912246784 / 0913096266

தொலைநகல் இல :- 0912246784

மின்னஞ்சல் :- herifo@gmail.com

இயைத்தளம் :- www.galleheritage.gov.lk

# காலி மரபுரிமை மன்றம்

# வருடாந்த செயற்திறன் அறிக்கை - 2015

**பொருளடக்கம்** **பக்கஇலக்கம்**


1. நோக்கு, பணிக்கூற்று,பெறுமானங்கள் 37

2. காலி மரபுரிமை மன்றத்தினால் வழங்கப்படும் வேவைகள் 38

3. காலி மரபுரிமை மன்றத்தை நிறுவுதல் 39

4. காலி மரபுரிமை மன்றம் 40

   4.1 காலி கோட்டயின் பௌதீக சூழமைவு 41-43

5. காலி மரபுரிமை மன்றத்தின் ஆளணி 44-47

6. காலி மரபுரிமை மன்றத்தின் செயற்பாட்டு நிர்வாகம் மற்றும் முகாமத்துவம் 48-49

7. காலி மரபுரிமை மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் 50-56

   7.1 காலி மரபுரிமை மன்றத்தின் சட்டத்தை திருத்தம் செய்தல் 57

   7.2 தெளிவூட்டல் மற்றும் சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் 58-60

   7.3 ஏனைய தெளிவூட்டல் 61

8. நிதி முன்னேற்றம் 62

9. 2015.12.31திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்று 63-70

# *1.*காலி மரபுரிமை மன்றம்

## ***நோக்கு***

***"இலங்கையின் மிகச்சிறந்த பண்பாட்டுச் சுற்றுலா நகர் உயிரோட்டமுள்ள உலக மரபுரிமை காலிக் கோட்டையாகும்"***

## ***பணிக்கூற்று***

***தொன்மைமிகு பண்பாட்டு மையமாக, தொல்லியல் முக்கித்துவமிக்க பிரதேசமாக காலிக் கோட்டையைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் மிகச் சிறந்த சுற்றுலா நகரமாக மேம்படுத்துதல்***

### ***பெறுமானங்கள்***

- கோட்டைச் சுவர் மற்றும் கட்டிடத்தை பேணிப்பாதுகாத்தல்.
- காலிக் கோட்டையில் இனங்களுக்கிடையில் பரஸ்பர ஒத்துழைப்பு ம்றறும் இணைப்பை ஏற்படுத்துதல்
- தொன்மைமிகுதன்மையைப் பாதுகாத்தல் தொடர்பான தெளிவுபடுத்தல
- மனப்பாங்கு விருத்தி
- பௌதீக அபிவிவருத்தி
- சுற்றுலா வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்
- சுற்றுலா வனப்புமிக்க இடங்களை உருவாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்
- காலிக் கோட்டையில் வசிப்போரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல்.
- காலிக் கோட்டையில் இனங்களுக்கிடையில் சமத்தவத்தை மேம்படுத்துதல்
- பாரம்பரிய வாழ்வாதார வழிகளை தரமுயர்த்துதல்.
- சுற்றுலாத் தொழிலுடன் தொடர்புடைய செயற்பாடுகளை முறைமைப்படுத்தல்.
- நுகர்வோர் பெறுமானங்களை அதிகரித்தல்.
- வினைத்திறனான சேவை வழங்குதல்.

## *2.* காலி மரபுரிமை மன்றத்தினால் வழங்கப்படும் சேவைகள்

1. காலிக் கோட்டையினுள் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்.
2. காலிக் கோட்டையின் அழகைத் தூய்மையாகப் பேணுதல்.
3. காலிக் கோட்டையினுள் கட்டிடங்களை அமைத்தல் , மாற்றஞ்செய்தலை முகாமைத்துவம் செய்வதற்க்காக காலிக் கோட்டை திட்டமிடல் குழுவுடன் செயற்படுதல்.
4. காலிக் கோட்டையினுள் அமைந்துள்ள பொது இடங்களை விழாக்களுக்காக ஒதுக்கிக்கொடுத்டுத்தல்.
    - நீதிமன்றத்துக்கு முன்னாலுள்ள திறந்தவெளி கலையரங்கு
    - சுதர்மாலய விகாரைக்கு அருகிலுள்ள ரூம்பாட் நிலப்பரப்பு.
    - சந்து பரண்
5. காலிக் கோட்டை தொடர்பாக விளக்கமளிக்கும் விரிவுரைகள் மற்றும் வெளிக்களச் சுற்றுக்களை ஏற்பாடுசெய்தல்.
6. காலிக் கோட்டையினுள் நடமாடும் வியாபாரிகளைப் பதிவுசெய்தல் மற்றும் நடமாடும் வியாபாரிகளை முறைமைப்படுத்தல்.
7. காலிக் கோட்டையினுள் தேவையான வாகனப் போக்குவரத்து தயாரிப்பதற்க்கான திட்டத்தைத் தயாரிக்க நடவடிக்கையெடுத்தல்.
8. காலிக் கோட்டையினுள் நடமாடும் பாதுகாப்பு சேவையை நடாத்துதல்.
9. காலிக் கோட்டை தொடர்பான தகவல்களைக்கொண்ட தகவல் மையத்தை பேணிச்செல்லுதல் மற்றும் “ ஊற்று” உவாவுகை நூலகத்தை நடாத்துதல்.
10. ஆண்டு முழுவதும் பண்பாட்டு நிகழ்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்
11. காலிக் கோட்டையினுள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
12. காலிக் கோட்டையினுள் படப்பிடிப்புச் செய்தலை முகாமைத்துவம செய்தல்.

## காலி மரபுரிமை மன்றத்தை நிறுவுதல்

- சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு காலிக் கோட்டை மற்றும் அதன் வருலாற்றுப் பெருமைமிக்க நிலத்தை பாதுகாத்தல்,பேணுதல், அபிவிருத்தி செய்வதற்கும், அதன் சொத்துக்கள் நடவடிக்கையெடுத்தலும், வசித்துவருவோரின் நலன்புரிச் செயற்பாடுகளுக்காக நடவடிக்கையெடுத்தலும் அடிப்படைக் குறிக்கோளாகும்.( சட்டத்தின் 03ஆவது பிரிவுக்கமைய)
- சட்டத்திற்கமைய காலி மரபுரிமை மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சர் எனப்படுவது அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்டபோதிலும் கலாச்சார அலுவல்கள் தொடர்பான விடயம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் அமைச்சரெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அதற்க்கமைய 2015 ஆண்டு வரைக்கும் காலி மரபுரிமை மன்றம் கலாச்சார அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்குரிய நிறுவனமாக அமுலாக்கப்பட்டது.
- 2015 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை நியமனத்துடன் 2015 ஜனவரி 22 ஆம் திகதி காலி மரபுரிமை மன்றம் கலாச்சார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் கொன்டுவரப்பட்டது.
- மீண்டுமொருமுறை இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்துடன் 2015 செப்ரெம்பர் 21 திகதி காலி மரபுரிமை மன்றம் உள்நாட்டலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் கொன்டுவரப்பட்டது.
- 2015 நவம்பர் 21 திகதி அதிசிறப்பு வர்த்தமானி மூலம் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொன்டுவரப்பட்ட நிறுவனமாக காலி மரபுரிமை மன்றம் பெயரிடப்பட்டது.
- மீண்டுமொருமுறை இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்துடன் 2015 செப்ரெம்பர் 24 காலி மரபுரிமை மன்றம் சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

# *4 வருடாந்த செயற்திறன் அறிக்கை - 2015*

## காலி மரபுரிமை மன்றம்

1994/07இலக்கபாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட காலி மரபுரிமை மன்றம் நியதிச்சட்ட நிறுவனமாகும்.

**காலி மரபுரிமை மன்றத்துக்குரிய நிலப் பிரதேசம்**

யுனெஸ்கோ நிறுவனத்தினால் உலக மரபுரிமையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காலிக் கோட்டை காலி மரபுரிமை மன்றத்தின் விடயப்பரப்புக்குரியதாகும். 14 காவற்பரண்களை கொண்ட இந்த கோட்டையின் கோட்டைச்சுவரின் நீளம் அண்ணளவாக 2.5 கி.மீ ஆகும்.

### உலக மரபுரிமை காலிக் கோட்டையின் வான்ஒளிப்படம்.




❖ காலி மரபுரிமை மன்றத்தினால் பேணிப்பாதுகாக்கப்பட்டு பார்வையாளர் கூடமாக மாற்றப்பட்டிருப்பது சந்திர காவலரண் அமைந்துள்ள போர் மண்டபமாகும்.

## *4.1*காலிக் கோட்டையின் பௌதீக சூழமைவு

இலங்கையின் தென்மாகாணத்தில் காலி மாவட்டத்தில் கடவத்சத்தர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 96 டி காலிக் கோட்டை கிராம அலுவலர்பிரிவுக்குரியதாகும். காலிக் கோட்டையானது 80.9067ஏக்கர் (32.7418 ஹெக்ரேயர்) நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.

## காலிக் கோட்டையின் சனத்தொகை தகவல்கள் -- *2011*

(தகவல் - தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்கள இணையத்தளம்)

| சிங்களம் | இலங்கைத் தமிழ் | இந்தியத் தமிழ் | இலங்கை முஸ்லிம் | பறங்கியர் | மலே | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 501 | 17 | 07 | 531 | 0 | 0 | 2 | 1058 |



**காலிக் கோட்டையின் தகவல்கள் 2015.01.01 இருந்து 2015.12.31 வரை(கடவத்சத்தர பிரதேச செயலக பிரிவின் வள பகிர்வு சார்ந்தது)**

**இனங்களுக்கமைய சனத்தொகை**

| | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் | பறங்கியா் | மலே | ஏனையோா் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| சனத்தொகை | 731 | 22 | 892 | 21 | 20 | - | 1686 |




***மொத்த சனத்தொகை***

| பெண் | ஆண் | மொத்த சனத்தொகை | மொத்த குடும்பம் |
|---|---|---|---|
| 913 | 773 | 1686 | 333 |



## வயது பிரிவுக்கமைய சனத்தொகை

| வயது: 0 - 4 | | | வயது: 5 - 17 | | | வயது: 18 - 60 | | | வயது: 61க்கு மேல் | | | மொத்த சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெண் | ஆண் | மொத்தம் | பெண் | ஆண் | மொத்தம் | பெண் | ஆண் | மொத்தம் | பெண் | ஆண் | மொத்தம் | பெண் | ஆண் | மொத்தம் |
| 49 | 43 | 92 | 204 | 169 | 373 | 489 | 397 | 886 | 171 | 164 | 335 | 913 | 773 | 1686 |

## வயது பிரிவுக்கமைய சனத்தொகை

| வயது: 0-4 | வயது: 5-10 | வயது: 11-20 | வயது: 21-30 | வயது: 31-40 | வயது: 41-50 | வயது: 51-60 | வயது: 60 மேல் | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 92 | 130 | 228 | 219 | 226 | 231 | 225 | 335 | 1686 |

## மதங்களுக்கமைய சனத்தொகை மற்றும் குடும்ப தொகை

| | பௌத்த | இந்து | முஸ்லிம் | றோ. கத்தோலிக்கர் | ஏனைய கிறிஸ்தவர் | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சனத்தொகை** | 715 | 22 | 892 | 21 | 36 | - | 1686 |
| குடும்ப தொகை | 141 | 06 | 179 | 04 | 03 | - | 333 |

## கோட்டையின் மொத்த நில அளவு

| விபரம் | நில அளவு(ஏக்கர்) | மொத்த நில அளவு |
|---|---|---|
| கட்டிடங்கள் | 87.75 | 91.40% |
| வீதிகள் | 1.125 | 1.17% |
| ஏனையவை | 7.125 | 7.42% |



## 5. 2015 ஆண்டில் காலி மரபுரிமை மன்றத்தின் ஆளணி

| தொடரி லக்கம் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திரு.ரம்ய சிறிவங்ஸ | தவிசாளர் |
| 2. | திரு.எச்.எல்.குணவர்த்தன | பணிப்பாளர் |
| 3. | திருமதி.சீதா பீ லியனகே | நிர்வாக அலுவலர் |
| 4. | திரு.ஏ.கே.பீ.கே.ஜயசிறி | கணக்கு அலுவலர் |
| 5. | திரு.எல்.ஏ.தரங்க புஸ்பகுமார | காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்ட உதவியாளர்(திட்டமிடல்) பதவிக்கு இணைக்கப்பட்ட அபிவிருத்தி உதவியாளர் |
| 6. | திருமதி.எஸ்.பீ.லொக்குலியன | காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்ட உதவியாளர்(திட்டமிடல்) பதவிக்கு இணைக்கப்பட்ட அபிவிருத்தி உதவியாளர் |
| 7. | திருமதி.பீ.ஜீ.என்.சந்தமாலி | காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்டஉதவியாளர்(திட்டமிடல்) பதவிக்கு இணைக்கப்பட்ட அபிவிருத்தி உதவியாளர் |
| 8. | திருமதி.பீ.எஸ்.இலேபெரும | முகாமைத்துவ உதவியாளர் |
| 9. | செல்வி.பியூமி ரேகானி | முகாமைத்துவ உதவியாளர் |
| 10. | செல்வி.மாபலகம ஹேவமானகே இஸானி பிரியதர்சினி | முகாமைத்துவ உதவியாளர் |
| 11. | செல்வி.டிலானி ஹர்சிகா விக்ரமசூரிய | முகாமைத்துவ உதவியாளர் |
| 12. | திருமதி.மொகமட் ஹம்ஸா பாதிமா பௌஸானா | முகாமைத்துவ உதவியாளர் |
| 13. | திரு.எம்.ஈ.நெத்மால் சிரந்த டி சில்வா | சாரதி |
| 14. | திரு.எம்.எல்.எஸ்.ஜயசேகர | பாதுகாப்பு அலுவலர் |
| 15. | திரு.டப்.ஜீ.நந்தன சமன் | பாதுகாப்பு அலுவலர் |
| 16. | திரு.ஏ.ஜீ.சமன் குமார | அலுவலகப் பணிப்பாளர் |

## 2015 ஆண்டில் காலி மரபுரிமை மன்றத்தின் ஆளணி

| பதவி | சம்பள குறியீட்டு இலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | தற்போதுள்ள தொகை |
|---|---|---|---|
| தவிசாளர் | பிடி 3/2015சுற்றுநிருபத் துக்கமைய கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது | 01 | 01 |
| பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலர் | எம்.எம் 1-1 | 01 | 01 |
| நிர்வாக அலுவலர் | ஜே.எம்1-1 | 01 | 01 |
| கணக்கு அலுவலர் | ஜே.எம்1-1 | 01 | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் (காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்ட உதவியாளர் (திட்டமிடல்) பதவிக்கு இணைக்கப்பட்ட) | எம்.என் 4 | 02 | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் (காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்ட உதவியாளர் தகவல் மைய பதவிக்கு இணைக்கப்பட்ட) | எம்.என்4 | 01 | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் (காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்ட உதவியாளர் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் பதவிக்கு இணைக்கப்பட்ட) | எம்.என்4 | 02 | 01 |
| கருத்திட்ட உதவியாளர்(கணக்கு) | எம்.ஏ 3 | 01 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | எம்.ஏ 1-1 | 04 | 04 |
| சாரதி | பி.எல் 3 | 01 | 01 |
| அலுவலகப் பணிப்பாளர் | பி.எல்1 | 01 | 01 |
| பாதுகாப்பு அலுவலா | பி.எல்1 | 04 | 02 |

## காலி மரபுரிமை மன்ற ஆளணியினரின் சேவைக்காலம் தொடர்பான விபரங்கள்

| தொ இல | பெயர் | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|---|
| 1. | திரு.ரம்ய சிறிவங்ஸ | தவிசாளர் | 2015.02.09 இலிருந்து 2016.02.29 வரை |
| 2. | திரு.எச்.எல்.குணவர்த்தன | பணிப்பாளர் | 2007.04.11 இலிருந்து இதுவரை |
| 3. | திருமதி.சீதா பீ லியனகே | நிர்வாக அலுவலர் | 2006.01.02 இலிருந்து இதுவரை |
| 4. | திரு.ஏ.கே.பீ.கே.ஜயசிறி | கணக்கு அலுவலர் | 2005.11.14 இலிருந்து இதுவரை |
| 5. | திரு.எல்.ஏ.தரங்க புஸ்பகுமார | அபிவிருத்தி உதவியாளர் (காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்ட உதவியாளர் (திட்டமிடல்) பதவிக்கு இணைக்கப்பட்ட) | 2006.08.01 இலிருந்து இதுவரை |
| 6. | திருமதி.பீ.ஜீ.என்.சந்தமாலி | அபிவிருத்தி உதவியாளர் (காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்ட உதவியாளர் (திட்டமிடல்) பதவிக்கு இணைக்கப்பட்ட) | 2006.08.01 இலிருந்து இதுவரை |
| 7. | திருமதி.எஸ்.பீ.லொக்குலியன | அபிவிருத்தி உதவியாளர் (காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்ட உதவியாளர் (திட்டமிடல்) பதவிக்கு இணைக்கப்பட்ட) | 2015.04.28 இலிருந்து இதுவரை |
| 8. | திருமதி.பீ.எஸ்.இலேபெரும | முகாமைத்துவ உதவியாளர்(தொ.சாரா) | 2015.11.02 இலிருந்து இதுவரை |
| 9. | செல்வி.பியூமி ரேகானி | முகாமைத்துவ உதவியாளர்(தொ.சாரா) | 2012.12.03 இலிருந்து 2015.09.15 இதுவரை |
| 10. | செல்வி.டிலானி ஹர்சிகா விக்ரமசூரிய | முகாமைத்துவ உதவியாளர்(தொ.சாரா) | 2015.09.01 இலிருந்து இதுவரை |
| 11. | செல்வி.மாபலகம ஹேவமானகே இஸானி பிரியதர்சினி. | முகாமைத்துவ உதவியாளர்(தொ.சாரா) | 2015.09.01 இலிருந்து இதுவரை |
| 12. | திருமதி.மொகமட் ஹம்ஸா பாதிமா பௌஸானா | முகாமைத்துவ உதவியாளர்(தொ.சாரா) | 2015.09.16 இலிருந்து இதுவரை |
| 13. | திரு.எம்.ஈ.நெத்மால் சிரந்த டி சில்வா | சாரதி | 2012.12.03 இலிருந்து இதுவரை |
| 14. | திரு.ஏ.ஜீ.சமன் குமார | அலுவலகப் பணிப்பாளர் | 2012.12.03 இலிருந்து இதுவரை |
| 15. | திரு.எம்.எல்.எஸ்.ஜயசேகர | பாதுகாப்பு அலுவலர் | 2012.12.03 සිට මේ දක්වා |
| 16. | திரு.டப்.ஜீ.நந்தன சமன் | பாதுகாப்பு அலுவலர் | 2012.12.03 இலிருந்து இதுவரை |

## காலி மரபுரிமை மன்ற ஆளணியில் ஏற்பட்ட மாற்றங்கள்.

- கலாச்சார அலுவல்கள் ராஜாங்க அமைச்சின் அபிவிருத்தி உதவியாளர் திருமதி.எஸ்.பீ.லொக்குலியன 2015.04.28 ஆம் திகதி காலி மரபுரிமை மன்றத்தின் கருத்திட்ட உதவியாளர் (திட்டமிடல்) பதவிக்கு இணைக்கப்படடு சேவையில் இணைந்துள்ளார்.

- 2015.08.24 ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்முககப் பரீட்சை ஊடாக காலி மரபுரிமை மன்றத்துக்கு பின்வரும் முகாமைத்துவ உதவியாளர்(தொ.சாரா)மூவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

| பெயர் | | நியமனத் திகதி |
|---|---|---|
| ○ செல்வி.டிலானி ஹர்சிகா விக்ரமசூரிய | - | 2015.09.01 |
| ○ செல்வி.எம்.எச்.எம். இஸானி பிரியதர்சினி. | - | 2015.09.01 |
| ○ திருமதி.எம்.எம். பாதிமா பௌஸானா | - | 2015.09.16 |

- 2012.12.03 ஆம் திகதியிலிருந்து காலி மரபுரிமை மன்றத்தின் முகாமைத்துவ உதவியாளராக (தொ.சாரா)பணியாற்றிய செல்வி.பியூமி ரேகானி அரச பணியில் இணைவதற்காக 2015.09.15 ஆம் திகதி காலி மரபுரிமை மன்றத்திலிருந்து விலகிச் விலகிச்சென்றார்.

## காலி மரபுரிமை மன்றத்தில் பணியாற்றிய தவிசாளர், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் நிர்வாவ அலுவலரின் விபரங்கள

### காலி மரபுரிமை மன்ற தவிசாளர் பதவி வகித்தவரது விபரங்கள்.

| தொடரிலக்கம் | பெயர் | பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆண்டு | சேவை முடிவுறுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1. | திரு. ரூபா கருணாதிலக்க மாண்புமிகு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் | 1989 | 1994 |
| 2. | திரு.நெவில் கனகரத்ன தென் மாகாண ஆளுநர் | 1994 | 2000 |
| 3. | கலாநிதி.ரிசட் பத்திரண | 2000 | 2002 |
| 4. | திரு.ரியன்ஸி விஜேதிலக்க (தவிசாளர், ஹற்றன் நெசனல் வங்கி ) | 2002 | 2003 |
| 5. | திரு.வஜிர அபேவர்த்ன மாண்புமிகு பொது நிர்வாக அமைச்சர். | 2003 | 2004 |
| 6. | திரு.ஜீ.எச்.அஜித்குமார காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் | 2004 | 2007 |
| 7. | திரு.பராகிரம தஹநாயக்க (மாநகர சபை உறுப்பினர், காலி மாநகரசபை) | 2007 | 2015 |
| 8. | திரு. ரம்ய சிறிவங்ஸ (ஓய்வுபெற்ற மாவட்ட செயலர்) | 2015.02.19 | 2016.02.29 |

### காலி மரபுரிமை மன்றத்தில் பிரதம நிறைவேற்று அலுவலர் பதவி வகித்தோர் விபரம்

| தொடரிலக்கம் | பெயர் | பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆண்டு | சேவை முடிவுறுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1. | திரு.பி.ஹேவாவசம் ஓய்வுபெற்ற மாவட்ட செயலர், காலி | 2001.12.15 | 2004.04.01 |
| 2. | திரு.பி.விஜேரத்ன (ஓய்வுபெற்ற மேலதிக மாவட்ட செயலர், காலி) | 2004.06.28 | 2005.12.31 |
| 3. | திரு.என்.டப்.என்.டி சில்வா (ஓய்வுபெற்ற பிரதேச முகாமையாளர்,இலங்கைவங்கி) | 2006.01.12 | 2007.02.28 |
| 4. | திரு.எச்.எல்.குணவர்த்தன (ஓய்வுபெற்ற பிரதேச செயலர், காலி கடவத்சர) | 2007.04.11 | இதுவரை |

### காலி மரபுரிமை மன்றத்தில் நிர்வாக அலுவலர் பதவி வகித்தோர் விபரம்

| தொடரிலக்கம் | பெயர் | பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆண்டு | சேவை முடிவுறுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1. | திரு.ஹேமநாத் குணவர்த்தன | 2001.03.01 | 2003.10.31 |
| 2. | திரு.பி.ஏ.கருணாசேன | 2004.03.25 | 2005.12.31 |
| 3. | திருமதி.சீதா பீ லியனகே | 2006.01.02 | இதுவரை |

## 6. காலி மரபுரிமை மன்ற செயற்பாட்டு நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

காலி மரபுரிமை மன்ற செயற்பாட்டு நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் மன்றத்தின் சட்டத்தினூடாக"முகாமைத்துவ சபை" க்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (சட்டத்தின் 5ஆவது பிரிவுக்கமைய)

காலி மரபுரிமை மன்றத்தின் முகாமைத்துவ சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாகும

### காலி மரபுரிமை மன்ற முகாமைத்துவசபைஉறுப்பினர்கள் 2015

| தொடரி லக்கம் | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1. | மாவட்ட செயலர்( உப தவிசாளர் - காலி மரபுரிமை மன்றம்) | மாவட்ட செயலகம், காலி |
| 2. | தொல்லியல் பணிப்பாளர் நாயகம் | தொல்லியல் திணைக்களம், ஸ்ரீமத் மாக்ஸ் பர்ணான்டோ மாவத்தை, கொழும்பு 07. |
| 3. | தவிசாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபை | நகர அபிவிருத்தி அதிகாரசபை, இல 07, செத்சிறிபாய,பத்தரமுல்ல. |
| 4. | தவிசாளர், இலங்கை துறைமுகஅதிகாரசபை | இலங்கை துறைமுக அதிகாரசபை, சைத்திய வீதி, இல 19, கொழும்பு 01 |
| 5. | பணிப்பாளர் நாயகம், மத்திய கலாச்சார நிதியம் | மத்திய கலாச்சார நிதியம், இல 212/1, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. |
| 6. | பணிப்பாளர், கரையோர பாதுகாப்பு திணைக்களம் | கரையோர பாதுகாப்பு திணைக்களம், 04 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10 |
| 7. | பிரதேச செயலர், | கடவத்சர பிரதேச செயலகம், காலி |
| 8. | மாண்புமிகு மாநகரசபைத்தலைவர் | மாநகரசபை, காலி |
| 9. | பணிப்பாளர், தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம் | தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம், இல 407, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. |
| 10. | தவிசாளர், தேசிய நீரியல் வள நிறுவனம் (நாரா) | தேசிய நீரியல் வள நிறுவனம் (நாரா), காக்கைதீவு, மட்டக்குளிய, கொழும்பு.15 |
| 11. | பணிப்பாளர், நினைவுச்சின்னங்கள் தொடர்பான கட்டிடக்கலைக் கல்விப் பிரிவு | கட்டிடக்கலைக் கல்விப் பிரிவு, மொறட்டுவ பல்கலைக்கழகம், மொறட்டுவ |
| 12. | தென் மாகாண கலாச்சார அமைச்சர் | தக்சணபாய, லபதுவ, காலி |
| 13. | பணிப்பாளர், தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | தேசிய நூதனசாலைகள் திணைக்களம், ஸ்ரீமத் மாக்ஸ் பர்ணான்டோ மாவத்தை, கொழும்பு 07. |
| 14. | தவிசாளர், இலங்கை நெதர்லாந்து நட்புறவுச் சங்கம் | இலங்கை நெதர்லாந்து நட்புறவுச் சங்கம், இல 95, குமார வீதி, கொழும்பு 11. |

## புதவிவழியாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்பட்ட “தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள்”

| தொடரி லக்கம் | பெயர் | பதவி | முகவரி | முகாமைத்துவ சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| 15. | திரு.என்.ஏ.என்.சரத்சேன | தென் பிராந்திய கடற்படை கட்டளைத்தளபதி | தெற்கு கடற்படை முகாம், தென் கடற்படைப் பிராந்தியம், மாகொல்ல. காலி | 2015.05.21 |
| 16. | திரு.எச்.டப். விஜேரத்ன | தவிசாளர், தென் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு | 06 ஆம் மாடி, மாவட்ட செயலகம், காலி | 2015.06.21 |
| 17. | திரு.லால் சமரசேகர | ஆளுநரின் செயலாளர் | ஆளுநர் செயலகம், கீழ் டிக்ஸன் வீதி, காலி | 2015.07.17 |
| 18. | திரு.ஏஸ்லி டி வொஸ் | கட்டிட நிர்மாண ஆலோசகர் | இல.131, டப். ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. | 2015.05.21 |
| 19. | திரு.பி.சாலிய டி சில்வா | சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகர் | சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம், காலி. | 2015.06.21 |
| 20. | கேணல் டயஸ் | 581 ஆவது படையணி | 581 ஆவது படையணித் தலைமையகம், பூஸா | 2015.06.21 |

## அமைச்சரால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்

| தொடரி லக்கம் | பெயர் | பதவி | முகவரி | முகாமைத்துவ சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| 21. | திரு.ரம்ய சிறிவங்ஸ | தவிசாளர், காலி மரபுரிமை மன்றம் | இல 737/1, பன்னிப்பட்டிய வீதி, பத்தரமுல்ல | 2015.02.19 |
| 22. | திரு.சிசிர அமரசிங்க | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | தொடமுன வீதி, மாத்தறை | 2015.02.19 |
| 23. | திரு.எல்.கே.ஆரியரத்ன | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | இல 10/2, ““தீபானி““, ஸ்ரீ விஜயாராம வீதி, களுடுமுல்ல, அம்பலாங்கொட | 2015.02.19 |
| 24. | சட்டத்தரணி.பி.எச்.விமல ரத்ன | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | இல 113,சன்சைட் வத்த, உழுட்டிகே,காலி | 2015.02.19 |
| 25. | திரு.சந்ர நாணயக்கார | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | இல 09, தெவட்ட வீதி, நுபே, மாத்தறை | 2015.02.19 |
| 26. | திருமதி.கே.ஈ.ஜயசிங்க | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | 184/2, எதிரிசிங்க வீதி,கிதுலம்பிட்டிய,உழுட்டி கே,காலி. | 2015.02.19 |

## 7. <u>காலி மரபுரிமை மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

### <u>கலாச்சார நிகழ்ச்சிகள்</u>

### <u>*2015.01.01 –புத்தாண்டுக் கொண்டாட்டம்.*</u>

புத்தாண்டின் ஆரம்பமான ஜனவரி 01 ஆம் திகதி கடமைகளை ஆரம்பிக்க முன்னதாக, அலுவலகத்தின் அனைத்து அலுவலர்கள் மற்றும் சகோதர நிறுவனங்களின் அலுவலர்களினதும் பங்குபற்றுதலுடன் மதவழிபாடுகளில் ஈடுபட்டு பிரித் ஓதலைச் செவிமடுத்து அதன் ஆசீர்வாதத்தைப் பெற்று அனைவரும் இணைந்து சிற்றுண்டிகளுடன் உபசாரத்தை அனுபவித்து மகிழ்ச்சியுடனும், சமாதானத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது. இது காலி மரபுரிமைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் கலாச்சார நிகழ்ச்சியாகும். அனைத்து செலவுகளும் அலுவலர்களின் சொந்தச் செலவுகளாகும்.





### <u>*2015.01.15 –தைப்பொங்கல் விழா*</u>

தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒத்துழைப்புடன் பணியாற்றும் குறிக்கோளுடன் மக்களால் மிகச் சிறப்பாக கொண்டாடும் தைப்பொங்கல் விழா காலி மரபுரிமை மன்றத்தின் ஒத்துழைப்புடன் பௌத்த மதகுருமார்களினதும் பங்கேற்புடன் காலி கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் சிறப்பாக நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வில் எமது அழைப்பையேற்று அரச அலுவலர்கள் உட்பட 100 க்கு மேற்பட்டோர் பங்குபற்றினார்கள், அப் பூசையின் இறுதியில் காலி மரபுரிமை மன்றத்தின் அனுசரணையில் அவர்கள் அனைவருக்கும் தேநீர் விருந்துபசாரமும் வழங்கப்பட்டது.



காலி மரபுரிமை மன்றத்தின் கலாச்சாரரீதியான நிகழ்வாக இது வருடாந்தம் ஏற்பாடுசெய்யப்படுவதுடன் இம்முறையும் இந்த நிகழ்ச்சிக்கு பங்களிப்பு வழங்கப்பட்டது. அதற்க்காக ரூ.10,000.00 நிதி செலவிடப்பட்டது.



## *2015.04.15 புத்தாண்டு எண்ணைதேய்த்தல்நிகழ்வு*

சிங்கள, தமிழ் புத்தாண்டில் இடம்பெறும் பாரம்பரிய சடங்காக தலைக்கு எண்ணைதேய்த்தல் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. காலி மரபுரிமை மன்றம் அதற்க்காக முன்னுரிமை வழங்கி பாரம்பரிய மருத்துவர்களின் பங்களிப்பைப் பெற்று காலி நீதிமன்ற சதுக்கத்தில் 250 க்கு கூடுதலானோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு சம்பிரதாயமுறைப்படி மேற்கொள்ளப்பட்டது. இதன்போது வெளிநாட்டவர்களும் பங்குபற்றியதும் விசேட அம்சமாகும். வருகை தந்த அனைவருக்கும் மருத்துவக்குணம் மிக்க வில்வம் பூ பானம் வழங்கி உபசரிக்கப்பட்டது. இந்த நிகழ்வை அழகூட்டுவதற்க்காக கீழைத்தேய நடன மரபின் சிறப்பு நடனத்துடனான கலாச்சார நிகழ்வும் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்காக ரூ.40,865.00 நிதி செலவானது.





## *2015.05.12 –தர்ம போதனை*

*மகவகல்லேவெகரஆரண்ய சேனாசன மற்றும் மாவதத்தகம தொடந்தலாவ ஆரண்ய சேனாசனாதிபதி வினயாசார்ய கம்மட்டானாசார்ய வணக்கத்துக்குரிய காஸ்யப்ப தேரரால் நடாத்தப்பட்ட சுமதுர தர்மபோதனை 2015.05.12 ஆம் திகதி மாலையில் காலி கோல்ட் ஹோல் மண்டபத்தில் நடத்தப்பட்டது. இதற்க்காக ரூ.30,000.00 அன்பளிப்பு கிடைத்ததுடன்,ரூ.3,921.00 நிதியை காலி மரபுரிமைகள் மன்றம் செலவிட்டது.*

.





## *2015.09.04,05,06 திகதி சர்வக்ஞதாது கண்காட்சி*

அம்பாறை நீலகிரிசாய அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட சர்வக்ஞ புனிதப்பொருட்கள் கோட்டை ஶ்ரீ சுதர்மாலய விகாரைக்கு எழுந்தருளச்செய்யப்பட்டு மக்கள் வழிபாட்டுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதற்க்காக காலி மற்றும் சூழவுள்ள பிரதேசங்களிலிந்தும் துாரப்பிரதேசங்களிலிருந்தும் பெருமளவான பக்தர்கள் பங்குபற்றியதுடன் முப்படையினர், பிரதேச செயலகம்,மாவட்டச் செயலகம், தென் மாகாண கலாச்சார அமைச்சு போன்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பு பெறப்பட்டது. இதற்கான செலவு ரூ.83,390.00 ஆகும்.





## ***அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்***

### ***சிப்நாரா கட்டிடத்துக்கு முன்பாக வடிகால் திருத்துதல்.***

காலிக் கோட்டையின் சாரணர் மாவத்தையிலுள்ள“சிப்நாரா” கட்டிடத்தின் பகுதியொன்றில் காலி மரபுரிமைகள் மன்றத்தினால் உணவகமொன்றை நடாத்தவதற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்துக்கு முன்பாக உள்ள வடிகாலை சீர்செய்தல் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அதற்காக ரூ.251,417.00 நிதி செலவிடப்பட்டது.





***சீர்செய்ய முன்னர்சீர்*** ***சீர்செய்த பின்னர்***

### ***தகவல் மைய கட்டிடம் திருத்தம் செயதல்***

காலிக் கோட்டையின் சாரணர் மாவத்தையிலுள்ள பிரதேச செயலகத்தக்குரியதாக இருந்த அழிவடைந்திருந்த கட்டிடம் காலி மரபுரிமைகள் மன்றத்துக்கு உரித்துப் பெறப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது. அவ்வாறு திருத்த நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்ட கட்டிடத்தில் 2014 ஆண்டில் “மரபுரிமை மையம்” எனும் பெயரில் தகவல் மையம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் “உல்பத” உசாவுகை நூலகமும் இந்த கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் அனுசரணையுடன் இந்திய கலரியும் இக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இத் தகவல் மையத்திலிருந்து காலிக் கோட்டை தொடர்பான தகவல்களைப் பெறுவதற்க்காக பெருமளவானோர் நாளாந்தம் வருகின்றனர். இக் கட்டிடத்தில் எஞ்சியிருந்த வேலைகள் சில இந்த ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக ரூ.198,262.00 செலவிடப்பட்டது.



## காண்டாமணிக் கோபுரம் திருத்தம் செய்தல்

*காலிக்கோட்டையிலிருந்த ஒல்லாந்த காண்டாமணிக் கோபுரம், ஒல்லாந்த களஞ்சிய கட்டிடத்திற்கு முன்பாக கோட்டைச் சுவரில் அமைந்துள்ளது.*
*ஒல்லாந்தர்களால் 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மணிக்கூட்டுத்தூணாக நிர்மாணிக்கப்பட்டதாகும். கடந்த 05 ஆண்டுகாலமாக காண்டாமணிக் போபுரம் சிதைவடைந்திருந்தது. காலி மரபுரிமைகள் மன்றத்தினால் இந்த ஆண்டில் அதன் பேணுதல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக ரூ.807,275.00 செலவிடப்பட்டுள்ளது.*



**திருத்தம் செய்யப்பட முன்னர்**



**திருத்தம் செய்யப்பட பின்னர்**

## *மணிக்கூட்டுக் கோபுர திருத்தம் 2015.10.22 திகதியிலிருந்து*

*காலிமணிக்கூட்டுத்தூண் என்பது காலிக் கோட்டையில் பிரித்தானிய வரலாற்றின் கட்டிடக்கலையின் ஓர் அங்கமாகும். அதன் மேற்பகுதி மின்னல் தாக்கத்தால் சேதமடைந்தது. மணிக்கூட்டுத் தூணை பேணிப் பாதுகாப்பதற்க்காக முழுமையான பேணுகைக் கருத்திட்டம் காலி மரபுரிமை மன்றத்தினால்* 2015.10.22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினால் இதன் பேணுகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. அதற்காக இந்த ஆண்டில் ரூ. **4,892,148.00**செலவிடப்பட்டுள்ளது.



***திருத்தம் செய்யப்பட முன்னர்***



***திருத்தம் செய்யப்பட பின்னர்***

## சந்திர காவலரணின் போர் அறைக்கு வளிச்சீராக்கல் மற்றும் மின்சாரம் வழங்கல்

*காலிக் கோட்டை சந்திர காவலரணிலுள்ள ஒல்லாந்தர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட 02 போர் அறைகள் காலி மரபுரிமை மன்றத்தினால் கடந்த 02 ஆண்டுகளாக பேணிப்பாதுகாக்கப்பட்டதுடன், காலியின் வரலாற்றை வெளிப்படுத்தும் கலரியை நிறுவுவதற்கு இது பயன்படுத்தப்படுகிறது. அதற்கமைய காலியின் வரலாற்றின் பல்வேறு சம்பவங்களை வெளிப்படுத்தும் 16 சிற்பங்களும், 12 சிலைகளும் குறித்த வளாகத்தினுள் நிறுவப்பட்டுளது. இந்த உள்ளக தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், வளிச்சீராக்கல், ஒளியூட்டல் போன்றவையும் உள்ளடங்குகிறது. அதற்காகரூ.***1,436,586.00** செலவிடப்பட்டுள்ளது.





## ஏனைய நிகழ்சிசித்திட்டங்கள்

### முகாமைத்துவ திட்டத்தைத் தயாரித்தல்.

யுனெஸ்கோ அமைப்பின் விதந்துரைகளை பூரணப்படுவதற்காக உலக மரபுரிமை காலிக் கோட்டைக்காக முறைப்படியான முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டிய தேவைப்பாடு நீண்டகாலமாக இருந்துவந்தது. இத் திட்டத்தைத் தயாரித்தல் கலாச்சார விவகார அமைச்சின் நெறிப்படுத்தலுக்கமைய *காலி மரபுரிமை மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டில் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த ஆண்டிலேயே அந்த நடவடிக்கைகளை நிறைவுசெய்ய முடிந்தது. இந்த திட்டம் காலிக் கோட்டையில் வசித்துவரும் உள்நாட்டு வெளிநாட்டு சமூகத்தவர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொல்லியல் கல்விப் பிரிவின் திரு. பிரசாந்த பீ மண்டாவல அவர்களால் தயாரிக்கப்பட்ட இந்த முகாமைத்துவ திட்டம் யுனெஸ்கோ அமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.*

அதறக்கமைய இதுவரைகாலமும் காலிக் கோட்டையின் முகாமைத்துவத்துக்காக முக்கியமான குறைபாடாக இருந்த முகாமைத்துவ திட்டத்தின் தேவைப்பாடு நிறைவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் காலி மரபுரிமையுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் இந்த திட்டத்தின் குறிக்கோள், இலக்குகளை அடைவதற்க்காக நெறிப்படுத்தும் பொறுப்பு காலி மரபுரிமை மன்றத்துக்குரியதாகும். இதற்கான செலவுகள் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டன.

## *7.1*காலி மரபுரிமை மன்றதின் சட்டத்தைத் திருத்தம் செய்தல்.

காலி மரபுரிமை மன்றதின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிற்சில விடயங்கள் தொடர்பில் அமைச்சரால் உத்தரவிட முடியும். இந்த உத்தரவை வழங்கமுன்னர் சட்டத்தை செல்லுபடியாக்குவதற்காக சட்டத்தை திருத்தம் செய்ய வேண்டுமென சட்டவரைஞரால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கமைய சட்டத் திருத்தம் செய்தல் இதற்குமுன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைய திருத்தத்துக்கமைவாக தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கிய சீ ஏ//08/2015 இலக்கஅமைச்சரவை விஞ்ஞாபனத்தில் விதந்துரைக்கப்பட்டு 2015 ஆண்டு மே மாதம் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர் நடவடிக்கைகள் சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சினால் அமுல்ப்படுத்தப்படவுள்ளது.

## *2015 ஆண்டின் முகாமைத்துவ சபைக் கூட்டம்.*

2015 ஆண்டின் காலி மரபுரிமை மன்றத்தின் முகாமைத்துவக் கூட்டங்கள் 10 நடத்தப்பட்டுள்ளன. இக்கூட்டங்களில் காலி மரபுரிமை மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மிக முக்கியமான முடிவுகள் மற்றும் தீர்மானங்கள் எடுக்கக்கூடிய இயலுமையுள்ளது.

## *7.2தெளிவூட்டல் மற்றும் சமூக நலன்புரி செயற்பாடுகள்*

### *2015.01.03 –பயிற்சிகள்*

*ஹிந்தி மொழி மற்றும் பாரதீய இசையைக் கற்கும் மாணவர்களுக்காக சங்கீதப் பயிற்சிகள் காலி மரபுரிமை மையத்தில் ஆரம்பிக்கப்பட்டது.*

### *2015.01.26 - தெளிவூட்டல் நிகழ்ச்சிகள்*

தென் மாகாண கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் காலி மரபுரிமை மன்றத்தின் வளப் பங்களிப்புடன் "தேசிய மரபுரிமைகள் மற்றும் உலக மரபுரிமைகள்" தொடர்பில் தெளிவூட்டலான விரிவுரை மாத்தறை ஜனாதிபதி வித்தியாலயத்தில் இடம்பெற்றது. அதற்காக 350 மாணவர்களும், 15 ஆசிரியர்களும் பங்குபற்றினார்கள்.

### *2015.03.20 இருந்து 22 வரை - கோட்டைகளைக்கொண்ட*

### *நகரங்களுக்கிடையிலான அறிவு பரிமாற்றல் நிகழ்ச்சிகள் (மட்டக்களப்பு மற்றும் காலி)*

கோட்டைகளைக்கொண்ட நகரங்களிலுள்ள மாணவ மாணவிகளுக்கிடையில் அறிவு பரிமாற்ற கல்வி நிகழ்வு காலி வக்வெல்ல முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 25 மாணவர்கள் மற்றும் 05 ஆசிரியர்களும் வலய கல்வி அலுவலக அலுவலரொருவரும் 2015 மார்ச் 20 ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து புகையிரதத்தில் காலிக்கு வருகைதந்ததுடன் காலியிலுள்ள 05 பாடசாலைகளைச் சேர்ந்த 25 மாணவர்கள், 05 ஆசிரியர்கள் மற்றும் தென் மாகாண கல்வியமைச்சின் அலுவலர்களாலும் அவர்கள் புகையிரத நிலையத்தில் வரவேற்கப்பட்டனர். கோட்டைகளைக்கொண்ட நகரங்களிரண்டையும் சேர்ந்த மாணவர்கள் இணைந்து பல்வேறு செயற்பாடுகளிலும் ஈடுபட்டதுடன், காலி மற்றும் மாத்தறை கோட்டைகளைப் பார்வையிடுவதற்கு கலவி தொடர்பில் முக்கியமான நூதனசாலைகள் போன்ற இடங்களைப் பார்வையிடுவதற்க்கும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் புரிந்துணர்வை வழங்குவதற்கும், போட்டிகள் நடாத்தி வெற்றிபெற்றோருக்கு பரிசளிப்பதற்கும், பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.



மூன்றுநாள் வதிவிட நிகழ்வான இது அனைத்து மாணவர்களினதும் தேசிய ஐக்கியம் மற்றும் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தும் நட்புறவு நிகழ்ச்சித்திட்டமாகும். இதற்காக ரூ. 363,525.00 செலவு செய்யப்பட்டது.



## 2015.03.29 – ““தேசத்தின் மரபுரிமைகள் பிள்ளைகளுக்கே நிகழ்ச்சித்திட்டம்” *(அறநெறிப் பாடசாலை பிள்ளைகளுக்கிடையிலான அறிவை மேம்படுத்தல்)*

கடவத்சத்தர சாசனாரக்சன சம்மேளனத்தின் அறநெறிப்பாடசாலை பிள்ளைகளின் ஆளுமை மேம்பாட்டுக்காக புராதன (கத்ய, பத்ய சங்ரகயன்) நூல்கள் சார்ந்த அறிவை அளவிடும் போட்டி 2015.03.29 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு காலி களுவெல்ல சர்வதேச பௌத்த நிலையத்தின் விகாராதிபதி, கடவத்சத்தர சாசனாரக்சன சம்மேளனத்தின் பதிவாளர், கணுமுல்தெணிய சந்தவிமல தேரரின் அறிவுரை மற்றும் தலைமையில் காலி களுவெல்ல சர்வதேச பௌத்த நிலையத்தில் நடைபெற்றது. இதில் 80 மாணவர்கள் பங்குபற்றிதுடன், அவர்களில் கூடுதலானோர் திருப்திகரமான புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் 2015.05.24 ஆம் திகதி களுவெல்ல சர்வதேச பௌத்த நிலையத்தில் பரிசளிப்பும், சான்றிதழ் வழங்கலும் நடைபெற்றது. இதற்க்காக ரூ. 35,412.00 செலவிடப்பட்டது.

## 2015.09.29 –“அசிதிசி இமென் எகா” நிகழ்ச்சி (தெளிவூட்டல் நிகழ்ச்சி)

காலி மரபுரிமை மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்படும் தெளிவூட்டல் விரிவுரைத்தொடரின் ஓர் நிகழ்வாக “அசிதிசி இமென் எகா” நிகழ்ச்சி அமுல்படுத்தப்படுகிறது. அதன் இன்னொரு நிகழ்ச்சி 2015.09.29 ஆம் திகதி காலி கோல்ட் ஹோல் மண்டபத்தில் நடைபெற்றது. தென்மாகாண கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்பு மற்றும் அங்கீகாரத்துடன் காலி மாவட்டத்தின் வரலாறு மற்றும் அதனோடிணைந்த விடயங்களை கற்கும் மாணவ மாணவிகளின் பங்கேற்புடன் இந்த தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.



இந்த தெளிவூட்டல் நிகழ்ச்சிகளில் பேராசிரியர் கே.டி.பரணவிதான அவர்களால் விரிவுரைகள் நடாத்தப்பட்டது. செலவுரூ. 112,544.00 ஆகும்.



**<u>காலி மரபுரிமை மன்றதின் அபிவிருத்தி உதவியாளர் (திட்டமிடல்) திரு. தரங்கலியனாராச்சி அவர்களால் நடாத்தப்பட்ட “காலி கோட்டை மற்றும் மரபுரிமை முகாமைத்துவம்” தொடர்பான விரிவுரை மற்றும் தெளிவூட்டல்</u>**

2015.01.27 “இலங்கை இன் ஸ்ரயில் ட்ரவல் ஏஜன்ஸி”நிறுவனத்தினால் காலி கோட்டையில் ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டவர்களின் சுற்றுலாவின்போது மரபுரிமை முகாமைத்துவம் தொடர்பான விரிவுரை நடத்தப்பட்டது.

2015.07.08 - காலி கோட்டை இராணுவ முகாம் உறுப்பினர்களுக்கு உலக மரபுரிமைகள் தொடர்பான விரிவுரை நடத்தப்பட்டது.

2015.07.15 –பூஸ்ஸ இராணுவ முகாம் உறுப்பினர்களுக்கு பிறிதொரு விரிவுரை நடத்தப்பட்டது.

2015.10.18 –காலி லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்குஉலக மரபுரிமை காலி கோட்டை தொடர்பான விரிவுரை நடத்தப்பட்டது.

எல்பிடிய பொலீஸ் பயிற்சிக் கல்லூரி அலுவலர்களுக்கு இந்த ஆண்டு பல தடவைகள் விரிவுரைகள் நடத்தப்பட்டது.

## *7.3* ஏனைய தெளிவூட்டல்கள்

காலி மரபுரிமை மன்றத்தின் ரோந்து பாதுகாப்பு அலுவலர் திரு. சிரங்க ஜயசேகர அவர்களால் காலி கோட்டையில் வெளிக்களச் சுற்றுலாவுடன் பல்வேறு தெளிவூட்டல் நிகழ்வுகள் 25 இந்த ஆண்டில் நடத்தப்பட்டது. இதன்போது பல்வேறு பாடசாலைகள், தொண்டர் அமைப்புக்கள், வெளிநாட்டுக் குழுக்கள், பல்கலைக்கழக குழுக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் இச் சேவையைப் பெற்றுக்கொண்டுள்ளன.

**<u>*2015* ஆண்டில் காலி மரபுரிமைகள் மையத்தினால் (தகவல் மையம்) வழங்கப்பட்ட சேவைகள்</u>**

கோட்டை சாரணர் மாவத்தையிலுள்ள காலி மரபுரிமைகள் மையத்தினால் (தகவல் மையம்) இந்த ஆண்டில் உள்நாட்டு, வெளிநாட்டவர்களுக்கு கோட்டையின் களச் சுற்றுலா ஏற்பாடு செய்தல் மற்றும் வழிகாட்டல் சேவைகள் வழங்கப்பட்டஇந்த தகவல்களைப் பெற்றுக்கொண்டோரில் ஜப்பான், இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, நெதர்லாந்து, சீனா, டென்மார்க், நியுசிலாந்து, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வருகை தந்தோரென்பது அவர்கள் மேற்கொண்ட பதிவுகளுக்கமைய தெரியவருகிறது.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றம் பல்வேறு கல்வி நிறுவனங்களின் குழுக்களுக்காக ‘‘உல்பத’’ உசாவுகை நூலகத்தின் மூலம் நாளாந்தம் இலவசமாக தகவல்கள் வழங்கப்படுகிறது.

# *நிதி முன்னேற்றம்*

| *விபரம்* | *2011* | *2012* | *2013* | *2014* | *2015* |
|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவுகளுக்காக அமைச்சிலிருந்து கிடைத்த நிதி (ரூ.மில்லியன்) | 4.0 | 5.3 | 5.4 | 8.0 | 9.0 |
| மூலதனச் செலவுகளுக்காக அமைச்சிலிருந்து கிடைத்த நிதி (ரூ.மில்லியன்) | 4.5 | 2.5 | 7.5 | 7.0 | 9.0 |
| செயற்பாட்டு வருமானம் (ரூ.மில்லியன்) | 1.422 | 1.749 | 2.440 | 3.991 | 4.1478 |

